**செய்தி வெளியீடு எண்: 309** **நாள்: 07.05.2018**

**<u>மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்களின் அறிக்கை – நாள் 7.5.2018.</u>**

சிறு, குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில், ''**கூட்டுப் பண்ணையத் திட்டம்**'' என்ற முன்னோடித் திட்டம் 2017–18ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் அறிவிக்கப்பட்டது. 2017–18ஆம் ஆண்டில் சென்னை தவிர அனைத்து மாவட்டங்களிலும், சிறு மற்றும் குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து **10,000 உழவர் ஆர்வலர் குழுக்கள்** அமைக்கப்பட்டுள்ளன. ஐந்து உழவர் ஆர்வலர் குழுக்களை ஒருங்கிணைத்து, 100 விவசாயிகளைக் கொண்ட உழவர் உற்பத்தியாளர் குழு என்ற அளவில் மொத்தம் **2,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் (Farmers Producer Groups)** ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வுழவர் உற்பத்தியாளர் குழுக்களை **உழவர் உற்பத்தியாளர் நிறுவனமாகவும்** படிப்படியாக உயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டது. இவ்வுழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் மூலம், நிதி ஆதாரங்களைத் திரட்டவும், நவீன தொழில்நுட்பங்களைக் கடைபிடிக்கவும், வேளாண் உற்பத்திக்குத் தேவையான இடுபொருட்களை கூட்டுக் கொள்முதல் செய்யவும், கூட்டு விவசாயம் செய்யவும், கூட்டாக சந்தைப்படுத்த தேவையான தொடர்புகளை வலுப்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

விதை, உரம், பூச்சி மருந்து போன்ற வேளாண் இடுபொருட்களை உழவர் ஆர்வலர் குழுக்கள் தொகுப்பாக மொத்த விலையில் வாங்குவதாலும், இடுபொருட்களை ஒரே வாகனத்தில் எடுத்து வருவதாலும், சாகுபடி செலவு கணிசமாக குறைகிறது. உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் தங்களது விளைபொருட்களை கூட்டாக சந்தைப்படுத்துவதால் மொத்த வியாபாரியிடமும், பெரிய நிறுவனத்திடமும் பேரம் பேசி நல்ல விலைக்கு விற்க முடிகிறது.

தமிழ்நாடு அரசால், **ஒவ்வொரு உழவர் உற்பத்தியாளர் குழுவிற்கும் மூலதன நிதியாக வழங்கப்பட்ட ஐந்து இலட்ச ரூபாய் நிதியின் மூலம்**, வேளாண் சாகுபடி மேற்கொள்வதற்குத் தேவையான டிராக்டர், சுழற்கலப்பை, விதைக்கும் கருவி, களையெடுக்கும் இயந்திரம் போன்ற வேளாண் இயந்திரங்கள் வாங்கப்பட்டன. இந்த இயந்திரங்களை குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர் விவசாயிகளும் பயன்படுத்தமுடியும் என்பதோடு, பிற விவசாயிகளும் குறைந்த வாடகை கட்டணம் செலுத்தி பயன் பெற முடிகிறது. **2017–18ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் நிதியினை மாண்புமிகு அம்மாவின் அரசு ஒதுக்கீடு செய்தது. இதன் மூலம் 8,829 பண்ணை இயந்திரங்கள் வாங்கப்பட்டன.** இவற்றில், 3 ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்கள், 747 டிராக்டர்கள், 1,849 பவர் டில்லர்கள், 1,369 களையெடுக்கும் இயந்திரங்கள், 783

சுழற்கலப்பைகள், 666 புதர் வெட்டும் கருவிகள் மற்றும் 3,412 இதர பண்ணை இயந்திரங்களும் அடங்கும். **இதன்மூலம் 1,98,800 சிறு, குறு விவசாயிகள் கடந்த ஓராண்டில் மட்டும் பயனடைந்துள்ளனர்.**

வேளாண் உற்பத்தியில் வெற்றி பெறும் சிறு குறு விவசாயிகள், வேளாண் வணிகத்திலும் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் 7 முதல் 10 உழவர் உற்பத்தியாளர் குழுக்களை ஒருங்கிணைத்து, உழவர் உற்பத்தியாளர் நிறுவனமாக மேம்படுத்தி கம்பெனிச் சட்டம் 2013ன் கீழ் பதிவு செய்யவும் மாண்புமிகு அம்மாவின் அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் இந்நிறுவனங்கள் சிறுவிவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பின் (Small Farmers Agri-business Consortium) நெறிமுறைகளின்படி, இரண்டு ஆண்டுகளில், ரூ.20 இலட்சம் வரையிலான நிதியுதவியினை பெற்று, கம்பெனி நிர்வாகத்தினை மேம்படுத்திக் கொள்வதுடன், வேளாண் வணிகத்திலும் வெற்றி பெறமுடியும். மேலும், இந்நிறுவனத்தின் செயல்பாட்டின் அடிப்படையில், மத்திய சிறுவிவசாயிகள் வேளாண் நட்பமைப்பின் பங்கு மானிய தொகையாக (Equity Grant) ரூ.10 இலட்சம் வரை பெறவும் மாண்புமிகு அம்மாவின் அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சென்ற ஆண்டு, கூட்டுப் பண்ணைய திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, 2018–19ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் வரவு செலவுத் திட்ட அறிக்கையில், இரண்டு லட்சம் சிறு குறு விவசாயிகள் பயனடையும் வகையில், புதிதாக 2,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கிட 100.42 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக கிராமங்களைத் தேர்வு செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

இதன் மூலம், மேலும் சுமார் 2 லட்சம் சிறு, குறு விவசாயிகள், பெரு விவசாயிகளுக்கு இணையாக நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, குறைந்த செலவில் அதிக மகசூல் பெற்று, நல்ல சந்தை விலை பெற்று, வாழ்வில் மேலும் வளம் பெற முடியும். இந்த உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் நாளடைவில் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளாக தரம் உயர்த்தப்படும் என்பதால், இந்த வாய்ப்பினை சிறு, குறு விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**